# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 13.06.2023 supeedsam.com supeedsam@gmail.com


# துள்ளிக் குதிக்காமல் அடக்கி வாசியுங்கள்! தமிழ் எம்.பிக்களை மிரட்டும் சரத் வீரசேகர

'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்தததுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டுத் துள்ளிக் குதிக்காமல் இருக்க வேண்டும். அவர்கள் அடக்கிக் வாசிக்க வேண்டும். இல்லையேல் சிறையில்தான் அவர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## ஊடக அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் திட்டமிடுகிறது



ஊடகங்களை அடக்குவதற்காக அரசாங்கம் கொண்டு வர திட்டமிட்டுள்ள சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற எந்த வகையிலும் இடமளிக்க போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதியின் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டாபய வசித்த வீட்டில் புதிய அரசியல் அலுவலகம்

கொழும்பு புல்லரஸ் வீதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த வீடு, தற்போது பொதுஜன பெரமுனவின் அமைச்சர் ஒருவருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு தேவையான பின்னணி இந்த

02 ஆம் பக்கத்தில்...

## சஜித்துடன் இணைய துடிக்கும் டலஸ்


### தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்க முயற்சியா?



பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுயேட்சை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து பரந்த அரசியல் சக்தியை உருவாக்குவதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக உள்ளக வட்டாரம் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதியின் கூட்டத்திற்கு எம்.பிக்களை அழைக்க கட்சிக்கு தெரியப்படுத்துங்கள்



ஜனாதிபதி தலைமையில் இன்று நடைபெறும் விசேட கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைக்கும் தேவை இருக்குமாயின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அறிவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, ஜனாதிபதி செயலகத்திற்கு தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## நச்சுத்தன்மை கொண்ட மீனை உட்கொண்ட மற்றுமொருவர் உயிரிழப்பு!

நச்சுத்தன்மை கொண்ட மீனை உட்கொண்டதால் சிகிச்சை பெற்றுவந்த மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

மாங்காடு கட்டுப்பிள்ளையார் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய தில்லையம்பலம் யூசைமலர் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## போராட்டத்தை கலைக்கவே ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்

போராட்டத்தை கலைப்பதற்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தது என ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்தும் தேவை எமக்கில்லை. பொதுஜன பெரமுனவின் ஒரு அணி

02 ஆம் பக்கத்தில்...

## மகனை தாயகம் அனுப்புமாறு இந்தியப் பிரதமரிடம் சாந்தனின் தாயார் கோரிக்கை!



இந்தியச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் சாந்தனின் தாயார் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தன் உள்ளிட்ட 7 பேரும்

02 ஆம் பக்கத்தில்...

## 3 சதவீதம் மட்டுமே மின்சார கட்டணம் குறைக்கப்படும்

இலங்கை மின்சார சபையினால் ஜுலை 1ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணக் குறைப்பில் 0 முதல் 30 அலகு வகைக்கான கட்டணம் 26.9 வீதத்தால் குறைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மின் கட்டண திருத்தத்தில், ஒட்டுமொத்த கட்டணக் குறைப்பு 3 சதவீதம் மட்டுமே.

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 25605: cicero





MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் இடம்பெற்ற திறப்பு விழா!!




மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சிறுநீரக சத்திரசிகிட்சை விடுதி, ஆரோக்கிய வாழ்வு நிலையம் மற்றும் Digital OPD System ஆகிய பிரிவுகள் (11) திகதி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி கலாரஞ்ஜினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக சுகாதர அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி அசேல குணவர்த்தன கலந்து கொண்டு புதிய பிரிவுகளை திறந்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வுகளில் சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கல்முனை தமிழ் கலாச்சார பேரவை விடயம் தொடர்பில் சாதக சமிக்ஞை

**(சுமன்)**

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்றைய தினம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் டபிள்யு.டி. வீரசிங்க தலைமையில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அரசியல் பிரமுகர்கள், மாவட்ட அரசாங்க அதிபர், அரச உயர் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு அபிவிருத்திக் குழுவினால் அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இக்கூட்டத்தில் மிக முக்கிய விடயமாக கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவை குறித்தும் அதற்கு சட்டரீதியாக வழங்கப்பட்ட காணிக்குள் மண் நிரப்புவதற்கு கல்முனை பிரதேச செயலாளர் மறுப்புத் தெரிவித்து வருகின்ற விடயம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டு அதற்கான அனுமதியும் கோரப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் கல்முனை பிரதேச செயலாளர் தெரிவிக்கையில், கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயம் தொடர்பிலான வழக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தில் நடைபெறுவதால் இதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிக்கையில் கல்முனை தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் அடக்குமுறை பலவற்றிற்குள் அரசியல் வாதிகளாலும், அரச அதிகாரிகளாலும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு முன்பும் பல்வேறு விடயங்கள் இவ்வாறு இடம்பெற்று வந்திருக்கின்றன. தற்போது கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவையின் காணிக்கு மண் இட்டு நிரப்பும் விடயத்தில் இவ் அடக்குமுறை கையாளப்பட்டு அக் காணி நிரப்புவதற்கான அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

இதன் போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹறிஸ் அவர்கள் கல்முனை கலாச்சாரப் பேரவைக்கு காணி இல்லை எனவும், இல்லாத காணிக்கு எவ்வாறு மண் இட்டு நிரப்புவதற்கு அனுமதி கொடுக்க முடியும் என்றும், அவ்வாறு அனுமதி கொடுக்கப்படக் கூடாது என்றும், நிரப்ப முடியாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவைக்கு காணி வழங்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் அரச நிருவாக ரீதியான சகல ஆவனங்களையும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பார்வைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இவை தொடர்பில் ஆராய்ந்த கிழக்கு மாகாண ஆளுநர் தற்போது கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற காணிக்கு மண் இட்டு நிரப்புவதற்கான அனுமதியைக் கொடுக்க முடியும் எனவும், இவ்விடயத்திற்கு விரைவாக ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முனைக்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய கும்பாவிசேகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள முனைக்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன அஸ்டபந்தன பஞ்சகுண்ட பட்ச பிரதிஸ்டா மகா கும்பாவிசேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 25.06.2023ஆம் திகதி கிரியைகளுடன் ஆரம்பமாகி 28.06.2023 ஆம் திகதி எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்ச்சியும் 29.06.2023ஆம் திகதி கும்பாவிசேகமும் நடைபெறவுள்ளது.

# ஏறாவூர் முகைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாயலில் ஹஜ் பயணிகளை வழியனுப்பும் விசேட நிகழ்வு




**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கையிலிருந்து இம்முறை 3500 பேர் பயணிக்கின்றனர்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை 263 பேர் பயணம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹஜ் பயணிகளை வழியனுப்பும் விசேட நிகழ்வு மட்டக்களப்பு - ஏறாவூர் முகைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாயலில் மௌலவி கேஎல்ஏ. அமீன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அன்வர் அலி கலந்துகொண்டார்.

நூறுல் அமானி பயண நிறுவனத்தின் பணிப்பாளர் எம்ஏஎம் . ஹசீர் மற்றும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை போன்ற பகுதிகளைச்சேர்ந்த ஹஜ்ஜாஜிகள் மற்றும் உறவினர்களும் நிகழ்வில் பிரசன்னமாயிருந்தனர்.

இங்கு ஹஜ்ஜாஜிகளுக்கான விமான பயண டிக்கட் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதன்போது மௌலவி எல்எச். அப்துல்லா விசேட பிரார்த்தனை நிகழ்த்தினார். இதையடுத்து பொதுமக்கள் ஹஜ்ஜாஜிகளை ஆரத்தழுவி வழியனுப்பினர்.

## கோட்டாபய வசித்த வீட்டில் புதிய அரசியல்...

வீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அரசியல் அலுவலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இந்த புதிய அலுவலகத்தில் இருந்தே ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திற்கு மொட்டுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்படுவதாகவும் பேசப்படுகிறது. இந்த நிலையில், இது சம்பந்தமாக பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் எதிர்ப்புகளை வெளியிட்டு வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

## 3 சதவீதம் மட்டுமே மின்சார கட்டணம் குறைக்கப்படும்

31 முதல் 60 அலகு வரையிலான மின் கட்டணம் 10.8 சதவீதமும், 61 முதல் 90 அலகு பிரிவினரின் மின் கட்டணம் 7.2 சதவீதமும், 91 முதல் 180 அலகு பிரிவினரின் மின் கட்டணம் 3.4 சதவீதமும் குறைக்கப்படும் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

180க்கும் மேற்பட்ட மின் அலகுகளின் கட்டணம் 1.3 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று கூறிய பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, மத ஸ்தலங்கள் மற்றும் அறநிலைய நிறுவனங்களின் மின்சாரக் கட்டணம் 3.2 சதவீதத்தால் மட்டுமே குறைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஹோட்டல் தொழில்துறையின் மின்சாரக் கட்டணம் 12.6 வீதத்தால் குறைக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது, எனினும் கைத்தொழில், பொது பிரிவினர், தெரு விளக்குகள் மற்றும் அரச நிறுவனங்களின் கட்டணத்தில் மாற்றம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மகனை தாயகம் அனுப்புமாறு இந்தியப்

30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்த நிலையில் கடந்த ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

முதலில் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்ட நிலையில் அதனை அடுத்து, சிறையில் இருந்த நளினி, முருகன், சாந்தன், ஜெயகுமார், ரொபர்ட் பயஸ் மற்றும் ரவிச்சந்திரன் உள்ளிட்டோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் இலங்கையைச் சேர்ந்த, முருகன், சாந்தன், ஜெயக்குமார் மற்றும் ரோபர்ட் பயஸ் ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகியும் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நச்சுத்தன்மை கொண்ட மீனை உட்கொண்ட மற்றுமொருவர் உயிரிழப்பு!

குறித்த பிரதேசத்தில் நச்சுத் தன்மை கொண்ட மீனை உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி, அவரது 3 வயதுடைய மகன் அஸ்வின், அவரது தாயாரான யூசைமலர், சகோதரன் 20 வயதுடைய கிறிஸ்ரின் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி என்பவர் உயிரிழந்ததுடன் அவரது தாயார் தொடர்ந்தும் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஜனாதிபதியின் கூட்டத்திற்கு எம்.பிக்களை

உறுப்பினர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைக்க, ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், நாமல் ராஜபக்ச தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். இதற்கு பதிலளித்துள்ள நாமல் ராஜபக்ச, அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதிக்கு அழைக்க முடியும் எனவும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமாயின் கட்சியின் ஊடாக அவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறும் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு கூட்டணி எனவும் அரசியல் விடயங்கள் தொடர்பாக பேச வேண்டுமாயின் கட்சியின் தலைவர்களுக்கு முதலில் தெரியப்படுத்த வேண்டும் எனவும் நாமல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திற்கு தொலைபேசி அழைப்பை எடுத்து, நடைபெறும் கூட்டம் குறித்து அறிவித்துள்ளார்.

## போராட்டத்தை கலைக்கவே ரணிலை ஜனாதிபதியாக...

ஐக்கிய தேசியக்கட்சிக்கு செல்லவோ, ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு அணியை எமக்கு கட்சியில் இணைப்பதே எமது தேவையல்ல.

ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம் என்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நாங்கள் வேலை செய்ய மாட்டோம்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்சவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே நாங்கள் பணியாற்றுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொண்டுவரும் சகல யோசனைகளையும் அனுமதிக்க வேண்டிய தேவை எமக்கில்லை.

நாங்கள் மகிந்த ராஜபக்சவின் கீழ் வளர்ந்தவர்கள். நாங்கள் அவர் கொண்டு வந்த அனைத்து யோசனைகளையும் ஆதரிக்கவில்லை. அவர் தவறு செய்தால், அதனை சுட்டிக்காட்டினோம். நாட்டுக்கு தேவையான அதிகாரிகளை இணைத்துக்கொள்வதற்கு பதிலாக வேலை வாய்ப்புகளை வழங்குவது தற்போது பழக்கமாக மாறிவிட்டது. எமது கல்வித்துறையில் பெரிய சிக்கல் இருக்கின்றது. இலங்கையில் கலைத்துறை பட்டதாரிகளே அதிகளவில் இருக்கின்றனர். எப்படியாவது கலைத்துறையில் பட்டத்தை பெற்றுக்கொண்டு, பின்னர், வேலையில்லாத பட்டதாரிகள் சங்கத்தை ஆரம்பிப்பார்கள்.

இதன் பின்னர் வீதியில் இறங்கி போராடுவார்கள் எனவும் சனத் நிஷாந்த மேலும் தெரிவித்துள்ளார்.

## துள்ளிக் குதிக்காமல் அடக்கி வாசியுங்கள்!

அடைக்கப்படுவார்கள்.' – இவ்வாறு மிரட்டல் பாணியில் தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போது அவர் மேலும் கூறுகையில், 'நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாத்தனம் என்றே கூறவேண்டும். இதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

பொலிஸாருடன் சண்டித்தனம் காட்டும் அளவுக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துணிவு வந்துள்ளது.

இப்படியானவர்களைக் கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில்தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச்சவடால் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது. முதலில் அவர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருந்த வேண்டும்.' என்றார்.

## சஜித்துடன் இணைய துடிக்கும் டலஸ்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ பரந்துபட்ட ஐக்கிய முன்னணியுடன் போட்டியிடும் நோக்கில் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தை தோற்கடித்து ஆட்சியைப் பிடிப்பது முதன்மையான நோக்கமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றத்தில் பிரவேசித்து சுதந்திரமாக செயற்படும் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்தும் கருத்து வெளியிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் ஒருவன் செய்திபிரிவிடம் பேசிய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பேச்சாளர், இரு கட்சிகளுக்குமிடையிலான கலந்துரையாடல்களில் சாதகமான பலன்கள் கிடைத்துள்ளதாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆனால் டலஸை பிரதிநிதித்துவப்படுத்தாத பல அரசியல் பிரதிநிதிகளும் இந்த புதிய பரந்த அரசியல் சக்தியுடன் இணைந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், சில அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தயக்கம் காட்டுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஜித்துடன் இணைந்து ஒரு பரந்த அரசியல் பிரச்சாரத்தில் பங்காளியாக இருக்க விரும்புவதோடு அரசியல் பீதியாக தவறான பிரமுகர்களை இந்த அரசியல் இயக்கத்துடன் தொடர்புபடுத்தத் தயங்குவதாக எமக்கு தெரிவித்தார்.

## ஊடக அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டு மக்கள் தகவல்களை அறிந்துக் கொள்ளும் உரிமையை இல்லாமல் செய்யவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுதன் மூலம் அந்த நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனக்கூறி, ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. நாட்டில் தேர்தலை ஒத்திவைத்து, ஊடகங்களை அடக்கி ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராவதற்காவே இதனை செய்து வருகின்றார் எனவும் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# திருமலையில் மஹாகும்பாபிஷேகம்..!






(அ . அச்சுதன் )

திருகோணமலையில் சைவமும்,தமிழும் தழைத்து ஓங்கும் திருகோணமலை நகரின் மத்தியில் மாணிக்கவாசகர் வீதியில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் வரலாற்று சிறப்புமிக்க மூலமூர்த்தியான பேச்சி அம்பாளுக்கும்,பரிவார மூர்த்திகளுக்கும் நிகளும் மங்களுகரமான வைகாசி மாதம் வெள்ளிக்கிழமை (09) சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் பிரதிஸ்டாபிரதம குருவும்,திருகோணமலை ீ.பத்திரகாளி அம்பாள் தேவஸதான ஆதினகரத்தாவுமான வேதாகமமாமணி பிரம்ம ீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் தலைமையில் இவ் ஆலயத்தின் ஆதினகர்த்தா கெங்காலிங்கம் சரவணப்பிரபு அவர்கள்ளின் ஒழுங்குபடுத்தலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை திறப்பு





(பாறுக் ஷிஹான்)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான குமுண தேசிய பூங்கா உடான காட்டுப்பாதை இன்று (12) திங்கட்கிழமை கழுகுமலை பத்து பாடி திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முன்னிலையில் காலை 7.30 மணியளவில் பாதை திறக்கப்பட்டது.

இம் முறை காட்டுப்பாதையூடாக சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து காலை 7 மணியளவில் காட்டுப் பாதை திறக்கப்பட்டது..

இன் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா ,மொனராகலை மாவட்ட அரசாங்கஅதிபர் ,ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க உள்ளிட்ட யாத்தியர்கள் பல அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனிருத்தனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோரின் ஏற்பாட்டில் காட்டுப் பாதை திறந்து வைக்கப்பட்டது.

முதல் நாளிலேயே சுமார் 2000 பாதயாத்திரீகர்கள் பயணித்தனர்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த ஜெயா வேல்சாமி தலைமையிலான மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாட்கள் இந்த பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

இன்று திறக்கப்பட்ட காட்டுப்பாதை இம் மாதம் 25 ஆம் தேதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் எதிர்வரும்19 ஆம் திகதி நடைபெற உள்ளது. யூலை மாதம் 04ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் .

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர்சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம். ''ஷேத்திராடனம்'' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.






மட்டக்களப்பு மேற்கு முனைக்காடு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய மா.சத்தியநாயகம் கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெற்று செல்வதையிட்டு பாடசாலை சமுகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வின் போது

# பாடசாலை அதிபர் ரயில்மோதி பலி

(தலவாக்கலை பி.கேதீஸ்)



பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி சென்றுக்கொண்டிருந்த புகையிரதத்தில் ரதெல்ல மற்றும் கிறேட்வெஸ்டன் புகையிரத நிலையங்களுக்கிடையே புகையிரத்தில் மோதுண்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று முன் தினம் (11) மாலை மீட்கப்பட்டுள்ளது. கிறேட்வெஸ்டன் கல்கந்த வத்தை தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிர்வேல் சுப்ரமணியம் (வயது 52) ரதெல்ல தமிழ் வித்தியால பாடசாலையின் அதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் ரதெல்ல பாடசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது. சிரமதான பணி முடிவடைந்து குறித்த அதிபர் புகையிரத வீதிவழியாக வீடு திரும்பிய நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளாரா அல்லது புகையிரத்தில் பாய்ந்து தற்கொலை செய்துக்கொண்டாரா என்பது தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த நபர் தனது வசிப்பிடத்திலிருந்து கிட்டதட்ட 30 வருடங்களுக்கு மேலாக புகையிரத வீதியினூடாகவே நடந்து பாடசாலைக்கு வந்து செல்வதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். சடலம் மரண பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு கல்லடியில் யோகாப்பயிற்சி





மட்டக்களப்பு கல்லடி இராமகிருஸ்ணமிசன் கலாசார நிலையமும் இந்திய உயஸ்தானிய அலுவலகமும் இணைந்து நடாத்திய யோகா பயிற்சி கல்லடி சுவாமி விபுலானந்தர் மணி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) இடம்பெற்றது.

உடல், உள ஆரோக்கியத்திற்கு யோகா பயிற்சி மிக முக்கியமானது என்பதனை தெளிவுபடுத்தும் வகையில் இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

இராமகிருஸ்ணமிசன், கரி இல்ல மாணவர்கள் இப்பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது பல்வேறு யோகாப்பயிற்சிகளை மாணவர்கள் செய்து காண்பித்தனர். இராமகிருஸ்ணமிசன் சுவாமி சுரர்சிதானந்தா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில், கிழக்குப்பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, கிழக்கு மாகாண மீன்பிடி துறை பணிப்பாளர் எஸ்.சுதாகரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது ஒவ்வொரு பயிற்சிகளும் உடலின் எப்பகுதியை ஆரோக்கியமாக வைப்பதற்கு உதவுகின்றது என்பது தொடர்பிலான விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சிகளை யோகா பயிற்றுவிப்பாளர் சி.சிறிதரன், ஜெயகரன் ஆகியோர் மாணவர்களுக்கு வழங்கியிருந்தனர்.

# மடு ஆலய ஆடி மாத விழாவுக்கான ஆலோசனைக் கூட்டம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் யாத்திரை ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு திங்கள்கிழமை (12.06.2023) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளமையால் இச் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆயரின் பிரதிநிதியாக கலந்த கொண்டார்.

அத்துடன் பல்வேறுபட்ட திணைக்களத் தலைவர்கள் , மடுத் திருப்பதி பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் மடுத் திருப்பதியின் ஆடி மாத பெருவிழாவை முன்னிட்டு நடைபெற வேண்டிய நடைமுறைகள்; பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதில் சுகாதாரம் போக்குவரத்து பாதுகாப்பு குடிநீர் உணவு விடயங்கள் மின்சார வசதி ஆகியன பற்றி முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

மருதமடு ஆலய ஆடி மாத பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகி எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி (02.07.2023) பெருவிழா இடம்பெறுகின்றது .

# ஊழல் மோசடி நிருபிக்கப்பட்ட நாவிதன்வேளி முன்னாள் தவிசாளருக்கு எதிராக இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

(சுமன்)

நாவிதன்வெளி பிரதேசசபை முன்னாள் தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடி நடவடிக்கைகளில் விசாரணையின் போது நிரூபிக்கப்பட்ட 13 குற்றச்சாட்டுகள் தொடர்பில் தவிசாளருக்கு எதிராக இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட முன்னாள் தவிசாளர் அரச தரப்பில் இரந்து கொண்டு ஏனைய முன்னாள் உறுப்பினர்களை அச்சறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். அவருக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டே ஆக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தனதுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டைப் பொருத்த மட்டில் இன்று அந்நிய செலவாணியை எதிர்பார்க்கின்ற நாடாகவே இருந்து கொண்டிருக்கின்றோம். இன்று எமது நாட்டின் இளைஞர் யுவதிகள் இந்த நாட்டின் பொருளாதார சுமைக்கு முகங்கொடுக்க முடியாமல் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

மேற்கத்தேய நாடுகளில் இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அதிகளவான மக்கள் வாழுகின்றார்கள். அங்கு அவர்களுக்கான சேவைகளைத் துரிதப்படுத்துவது எமது நாட்டின் குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் தலையாய கடமையாகும். எமது நாட்டின் குடிவரவு குடியகழ்வுத் திணைக்கத்தின் பெரும்பாலான வேலைத்திட்டம் கடவுச் சீட்டு வழங்குவதாக இருந்தாலும், எமது நாட்டில இருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கான கடவுச் சீட்டுகளைப் புதுப்பிப்பதில் சில தாமதங்கள் ஏற்படுகின்றன. இதற்கான ஒரு செயற்பாட்டினை உரிய அமைச்சர் அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும். பலர் இவ்வாறு எமது நாட்டின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்து வெளியேறிய வரலாறுகளும் உண்டு.

தேசிய அடையாள அட்டை புதுப்பிக்கும் போதுகூட காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே இவற்றை இலகுபடுத்தக் கூடிய வகையிலே உரிய திணைக்களங்களின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். எமது நாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளாக இருக்கலாம், எமது நாட்டில் வசிக்கும் உறவுகளைப் பார்க்க வருகின்ற புலம்பெயர்ந்த உறவுகளாக இருக்கலாம் அவர்கள் இங்கு வருகின்ற போது சொல்ல முடியாத அசௌகரியங்களை அனுபவிக்கின்றார்கள். அவ்வாறில்லாமல் இவ்வாறான துரிதப்படுத்தல்கள் மூலம் அவர்களுக்குரிய நடவடிக்கைகளை இலகுபடுத்த வேண்டும்.

செலவீனங்களைக் குறைத்து மிக இலகுவில் கடவுச்சீட்டுகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது அரசாங்கம் பிரதேசசெயலகங்களினூடான விடயங்களை முன்னெடுத்து வருகின்றது. இது வரவேற்கத்தக்க விடயம். இதனை இன்னும் விரிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில், சம்மாந்துறை என்ற பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டள்ளன. பொத்துவில் இருந்து சம்மாந்துறை என்று பார்க்கின்ற போது ஐம்பது ஆறுபது கிலோமீட்டர்கள் வரை இருக்கின்றது எனவே இடையில் இருக்கின்ற ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் மேற்படி நடைமுறைகளைப் பேணுவதற்கும் அப்பிரதேச செயலகத்தை தெரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கின்றேன்.

எமது நாட்டைப் பொருத்தமட்டில் மத்திய, மாகாண, உள்ளுராட்சி என்ற ரீதியில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனால் உள்ளுராட்சி மன்றங்களைப் பொருத்தமட்டில் ஒரு சிறந்த நிருவாகத்தைச் செய்கின்ற இடமாக அது இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலே அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசசபை சம்மந்தமானதொரு பதிவை நான் இங்கு முன்வைக்க வேண்டும். குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எமது நாவிதன்வெளி பிரதேச சபையில் அதன் தவிசாளரால் மேற்கொள்ளப் படுகின்ற ஊழல் விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்கள் இணைந்து ஒரு கடிதம் 2022.08.12ம் திகதி அனுப்பியிருந்தார்கள். அதன் பிற்பாடு அங்கு இடம்பெறும் மோசடிகள் குறித்து விசாரணை இடம்பெற வேண்டும் என்று அப்பிரதேச சபையின் தவிசாளர் தவிர்த்து ஏனைய அனைத்து உறுப்பினர்களும் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருககு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்றன. 13 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. தற்போது சபை கலைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தக் குற்றங்கள் புரிந்த தவிசாளருக்கு எதிராக ஒரு நடவடிக்கை கூட எடுக்கவில்லை. தற்போது அவர் அரச தரப்பில் இருந்து கொண்டு தனக்கெதிராக ஒப்பமிட்டவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இது ஒரு பிழையான நடைமுறை. அரச சொத்துக்களையும், அரச உடமைகளையும் துஸ்பிரயோகம் செய்பவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே நாவிதன்வெளி பிரதேசசபை சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். நாங்கள் இலஞ்சம் ஊழலுக்கு எதிரானவர்கள், எமது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்று நிற்பவர்கள்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கனகர் கிராமம் என்ற கிராமத்தில் குறிப்பாக 1987ம் ஆண்டு இனக்கலவரத்தின் மூலம் குடியெழுப்பப்பட்ட மக்கள் ஜனாதிபதி மற்றும் எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் வீரசிங்க அவர்களின் ஒத்துழைப்புடன் தற்போது அங்கு மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே ஜனாதிபதி, எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் இவ் உயரிய சபையில் எமது மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

# ஆளுநரால் 350 விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகள் வழங்கி வைப்பு





கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆளுநரால் 350 விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகள் வழங்கி வைப்பு.

கிழக்கு மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வாழை மற்றும் மாதுளை பழ உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நீர்ப்பம்பிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (10.06.2023) இடம்பெற்றது.

மட்டக்களப்பு, கல்லடி சன்சைன் கிறான்ட் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்,தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன், மாகாண பிரதித் திட்டப்பணிப்பாளர் கே.கருணாகரன் மற்றும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதல்கட்டமாக 350 நீர்ப்பம்பிகள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டது.

# திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சருக்கு கௌரவிப்பு நிகழ்வு





(எப்.முபாரக்)

திருகோணமலை சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை சிறைச்சாலையில் சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் ''வசந்த குமார டேப்'' அவர்களுக்கான பிரியாவிடை கௌரவிப்பு வைபவம் (10) மாலை திருகோணமலை சிறைச்சாலையில் சங்கத்தின் தலைவர் திரு.பாஸ்கரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது திருகோணமலை சிறைச்சாலையில் சிறைச்சாலை அத்தியட்சகராக கடமையாற்றிய அத்தியட்சகருக்கு சினைவுச் சின்னமும்,வாழ்த்துப்பாவும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறைச்சாலை நலன்புரிச் சங்அத்தின் தலைவர்,உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

# இராணுவத்தினருக்கும் சுகாதாரத் துறைக்கும் இடையில் பரஸ்பர நல்லிணக்கத்தில் இரத்ததானம்





( வாஸ் கூஞ்ஞ)

543 ஆவது காலாட்படைப் பகுதியிலுள்ள சிவிலியன் சமூகத்தின் இதயங்களை வெல்வதற்கும்இ இராணுவத்தினருக்கும் சுகாதாரத் துறைக்கும் இடையில் பரஸ்பர நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் 54 ஆவது படைப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் நலிந்த நியங்கொட மற்றும் 543 ஆவது காலாட்படை படைத் தளபதி பிரிகேடியர் துஷார ஹரஸ்கம. அவரது வழிகாட்டலின் கீழ் இரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சி மன்னார் நகர மண்டபத்தில் 09 ஜுன் 2023 அன்று 0830 மணி முதல் 1630 மணி வரை வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்டப் படம்.

இதில் அதிகமான இராணுவனத்தினர் இரத்ததானம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# 600 போலிஸ் உத்தியோகத்தர்கள் கோல்லப்பட்டு 33 வருட ஞாபகார்த்த நிகழ்வு









(பாறுக் ஷிஹான்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் மிலேட்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டு 33 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஸ்டிக்கும் முகமாக நிகழ்வு ஒன்று சனிக்கிழமை11) அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் முன்பாக நினைவு தூபியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறி அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸார் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தினால் உயிர்நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறியினால் பொலிஸ் கொடி அரைகம்பத்தில் ஏற்றப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொத்துவில் அக்கரைப்பற்று சம்மாந்துறை உள்ளிட்ட பல போலீஸ் நிலையங்களை முற்றுகையிட்ட புலிகள் சகல சிங்கள முஸ்லிம் போலீசார்களையும் ஆயுதங்களையும் அள்ளிச் சென்றார்கள். அதன் பின்பு திருக்கோவில் பகுதியில் உள்ள ரூபஸ்குளம் காட்டுப் பகுதியில் சகல பொலிசாரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக குறிப்பிடப் படுகின்றது.



**உலக சுற்றாடல் தின அனுஷ்டிப்பு நிகழ்சித் திட்டத்திற்கு அமைவாக அக்கரைப்பற்று கல்வி வலய அறிவுறுத்தல்களுக்கிணங்க அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் சுற்றாடலை மேம்படுத்தும் ஒரு வார கால விஷேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக, இப்பாடசாலை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு வைக்கும் நிகழ்வு இன்று(12) இடம்பெற்றது. இதன்போது அதிபர் ஏ.பி.முஜீன் மரக்கன்றினை நட்டு வைப்பதையும் அருகில் பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதபி அதிபர்களான ஏ.எம்.நபீல், ஏ.எல்.சம்சுல் பழீல், ஏ.எல்.முகைதீன்பாவா, ஆசிரியர் எம்.ஐ.இக்பால் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

**(படம்: எம்.ஏ.றமீஸ்)**

# கல்முனையில் உயர்தர டியூசன் வகுப்புகளை 30 ஆம் திகதி வரை தாமதப்படுத்துங்கள்

## மாநகர ஆணையாளர் அறிவுறுத்தல்

(ஏ.எம்.அஸ்லம்)

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் க.பொ.த. உயர்தர புதிய மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், இம்மாதம் 30ஆம் திகதி வரை தாமதப்படுத்துமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி வலியுறுத்தியுள்ளார்.



க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிறைவடைந்துள்ளதையடுத்து க.பொ.த. உயர்தர டியூசன் வகுப்புகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு பல டியூட்டரிகள் ஏட்டிக்குப் போட்டியாக விளம்பரப்படுத்தியுள்ள நிலையில், அறிக்கை ஒன்றின் ஊடாக கல்முனையிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

பல்வேறு அர்ப்பணிப்புக்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த சாதாரணதர பரீட்சையினை நிறைவு செய்திருக்கின்ற மாணவர்களும் பெற்றோர் மற்றும் கல்விச் சமுகத்தினரும் எம்மிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாகவே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்தர கல்விக்கான தத்தமது துறைகளை தேர்வு செய்வதற்கும் உரிய தயார்படுத்தல்களுக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு போதிய கால அவகாசமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, இவற்றை கவனத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இவ்வகுப்புக்களை ஆரம்பிக்காது இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடனான வியாபார உத்தரவுப்பத்திரத்தின்பால் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் தவறும் பட்சத்தில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐந்து கல்விமான்களுக்கு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிப்பு





(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 80 வது ஆண்டு அமுத விழா வினை முன்னிட்டு ஐந்து கல்விமான்களுக்கு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. வெள்ளி, சனி.ஞயிறு என மூன்று நாட்கள் நடை பெரும் அமுத விழா நிகழ்வுகள் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரனி நடராஜா காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வின்போது இயல் முனைவர் பட்டங்கள் பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் சி.பத்மநாதன், சாகித்தியரத்ன டொக்டர் தி ஞானசேகரன், ஜனாதிபதி சட்டத்தரனி முனைவர் கனக ஈஸ்வரன், முனைவர் செல்வி திருச்சந்திரன் ஆகியோர்களுக்கு தமிழ் சங்கத்தின் தலைவரினால் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு: 36 துறை சார்ந்தவர்களுக்கு கௌரவமளிப்பு!!

## ஹக்கீம், ஹரிஸ் உட்பட பிரமுகர்கள் பலரும் பங்கேற்பு !









நூருல் ஹுதா உமர்

அக்கரைப்பற்று தமிழ் லெட்டர் வலையமைப்பு எட்டாவது தடவையாக நடாத்திய ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு இம்முறை இக்கட்டான காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களை கௌரவிக்கும் விதமாக அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் தமிழ் லெட்டர் பிரதானி சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல். ரமீஸின் நெறிப்படுத்தலில் அதிபர் ஏ.ஜீ.எம். அன்வர் தலைமையில் சனிக்கிழமை (10) இரவு நடைபெற்றது.

அதில் 2022-23 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆளுமைக்கான விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது, பூர்வீக சமூகத்தின் நம்பிக்கை விருது, சிறந்த கல்வி சேவைக்கான விருது, சிறந்த சமூகவியலாளர் விருது, சிறுவர் மேம்பாட்டுக்கான விருது, சமூக சேவைக்கான விருது, வளர்ந்து வரும் அரசியல் தலைமைத்துவ விருது, இளம் தலைமைத்துவ சமூக விருது, சிறந்த இளம் தொழிலதிபர் விருது, மக்கள் அபிமான விருது, தொழிநுட்ப விருது, உள்ளூராட்சி மன்ற தலைவர் விருது, உள்ளூராட்சி உறுப்பினர் தலைவர் விருது, சிறந்த ஆயுர்வேத வைத்தியசாலை நிர்வாகத்திற்கான விருது, மருந்தாளருக்கான விருது, நல்லிணக்கத்துக்கான விருது, சுகாதார சேவைகளுக்கான விருது, சிறந்த எழுத்தாளருக்கான விருது, விளையாட்டுத்துறை விருது, சிறந்த மனிதாபிமான விருது, பெண்கள் மேம்பாட்டுக்கான விருது, ஆளுமைப் பெண்ணுக்கான விருது, சமூக சேவைக்கான விருது என்பன வழங்கப்பட்டது.

பிரபல ஊடகவியலாளர், அறிவிப்பாளர் யூ.எல்.என். ஹுதா தொகுத்து வழங்கிய இந்நிகழ்வு சிரேஷ்ட ஊடகவியலாளர், அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் அவர்களின் தொடக்கவுரையுடன் ஆரம்பமானது. இந்த ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்ட முதுமானி ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழு செயலாளர் எம். கோபாலரத்னம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான எஸ்.எம். சபீஸ், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர், பிரதேச சபைகளின் முன்னாள் பிரதி தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

# மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தோணி இன்றி தவீத்த மீனவர் ஒருவருக்கு தோணி





(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வாகரையில் நீண்டகாலமாக மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தோணி இன்றி தவீத்த மீனவர் ஒருவருக்கு தோணி இன்று வழங்கப்பட்டது.

5 ஆம் வட்டாரம் வாகரையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான க.இன்பராஜா என்பவருக்கே இவ் மனித நேய உதவி வழங்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக மீன் பிடித் தொழில் ஈடுபட்டு வருவதாகவும் தனக்கு தோனி இல்லாத காரணத்தால் அயலவர்களின் உதவியுடன் தோனியினை பெற்று மீன் பிடி தொழில் ஈடுபட்டு வந்ததாகவும் இதனால் தாம் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகவும் தெரிவித்தார்.அத்துடன் தோனியொன்றினை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி வசதியுமின்றி துன்பப்பட்டதாக கூறினார்.

தற்போது வாசம் உதவும் கரங்கள் அமைப்பினர் தம் நிலவரம் அறிந்து அதன் தலைவர் வே.பிரபாகரன் விடுத்த வேண்டுகோளினையடுத்து புலம் பெயர் நாட்டிலுள்ள உறவுகளான கனடா நாட்டைச் சேர்ந்த பிறேம் மற்றும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த லோகன் குடும்பத்தினர் இணைந்து இவ் மனித நேய உதவியினை வழங்கியுள்ளனர்.

# சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவி கௌரவிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி மாணவி உ.அபிநயா (12) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையிலும் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்களின் ஒருங்கிணைப்பிலும் உ.அபிநயா அவர்களுக்கு மேலதிக பிரதிலாபக் கொடுப்பனவாக ரூபா 25,000 பெறுமதியான காசோலை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் பல விடயங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவ்வேலைத் திட்டமும் ஒன்றாகும்.

இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.சஜிக்கா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர் எஸ்.புவகிதன் கலந்து கொண்டனர்.

# இலங்கைக்கான ரஷ்யா தூதுவருக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்குமிடையில் சந்திப்பு!

(ஹஸ்பர்)

இலங்கைக்கான ரஷ்யா தூதுவர் Levan S. Dzhagaryan (லெவன் எஸ். ட்ஜகார்யன் ) (11) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு மரியாதை நிமித்தம் வருகை தந்து, கிழக்கு மாகாணத்தின் சமீபத்திய அபிவிருத்திகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானு டன் கலந்துரையாடினார்.

இதன்போது கிழக்கு மாகாணத்திற்கு வருகைதரும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துத் தருவதாக ரஷ்யா தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநருக்கு உறுதியளித்தார்.



## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 02

# இப்போதைக்குச் செலவுச் சிக்கனமும் புத்திசாதுரியமும் அவசியமா?

எப்படியும் எதுவும் செய்யலாம் என்பதை விடுத்து இப்படியும் சிக்கனமாகச் செய்யலாம் என்பதை தக்கபடி உணர்ந்து மக்களின் சுமை குறைக்க ஏற்றபடி சிந்தித்துச் செயற் படுவோம்.





**சோலையூர்க் குருபரன்**

**நமக்கு** இருக்கும் பகுத்தறிவு நல்லது கெட்டதை அறிந்து பொருத்தமானதைச் செய்து நிறைவேற்றுவதற்கே என்பதைப் பலர் மறந்து விடுகின்றனர். சில வேளைகளில் மனிதன் நான்கறிவு கொண்ட பறவைகள், ஐந்தறிவு கொண்ட மிருகங்களையும் விட மிக மோசமாக நடந்து விடுகிறான். நம்மைக் குத்தவரும் மூவறிவு (பரிசம், ரசம், கந்தம்) கொண்ட நுளம்பு கூட நமது குருதியின் வகை, வியர்வை, நமது உடல் வெப்பம் என்பவற்றைத் தெளிவாக அறிந்து கொண்டு நாம் கையினால் அடிக்க முடியாத இடத்தில் புத்தி சாதுரியமாகக் குத்திச் செல்கிறது. அதேபோல்தான் ஒவ்வொரு உயிரினமும் தமது உணவு, பாதுகாப்பு என்பவற்றுக்காக எவ்வளவோ முயற்சி செய்கின்றன. எறும்பு, தேனி ஆகியன புத்தி சாதுரியத்துக்கும், சுறுசுறுப்புக்கும் உதாரணமாகக் கூறப்படுகின்றன. நீரில் வாழவன, நிலத்தில் ஊர்ந்து செல்வன, பறவைகள், மிருகங்கள் யாவும் தமது வாழ்க்கை முறை, உணவுச் சங்கிலி என்பவற்றில் இருந்து இம்மியளவும் விடுபடவில்லை. மனிதனிடம் ஆறாவது அறிவான பகுத்தறிவு இருந்தும் பல சந்தர்ப்பங்களில் பஞ்சமகா பாவங்கள், வஞ்சகம், சூது, வாது, கள்ளம், கபடம், போட்டி, பொறாவை, அடுத்துக் கெடுத்தல், ஊழல், மோசடி என்பவற்றில் ஈடுபட்டுப் பலர் மற்றவரின் சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒருவரிடம் அளவுக்கதிகமான ஆசையும், கோபமும் இருந்தால் அவர் வாழ்க்கையில் நிம்மதியாக வாழ மாட்டார். ஆசை (மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை), பதவி, அதிகாரம், பக்க பலம், செல்வாக்கு இருந்தால் அவர் தன்னை மறந்து ஆட்டம் போட ஆரம்பிப்பார். அவரின் ஆட்டத்துக்கு எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அப்போது எல்லாம் இழந்து நிற்றபார். 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவர்' எல்லோருக்கும் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு(இறப்பு) நிரந்தரமானது. இதில் இருந்து யாரும் தப்ப முடியாது. நல்லபடி வாழ்பவனே வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தை அடைவான். 'யாவும் கடந்து போகும்' 'இதுவும் கடந்து போகும்' மாற்றம் ஒன்றுதான் மாறாதது' என்பதைப் புரிந்து கொண்டு வாழ்க்கையைப் புத்தி சாதுரியமாகச் சீரமைத்துக் கொண்டால் நிம்மதியாக வாழலாம்.'விரலுக்குத் தக்கதுதான் வீக்கம்' என்பதுபோல் வரவுக்கேற்ப செலவு செய்து சிக்கனமாக வாழப் பழகிக் கொண்டால் மகிழ்ச்சியோடு வாழலாம். இல்லையெனில் வாக்கை முழுவதும் துன்பமே நிலைத்திருக்கும்.

வாழ்க்கை வாழ்வதற்கே. சீர்கெட்டு வாழ்வதற்கல்ல. இந்த வாக்கை நமக்குக் கிடைத்த வரம். சகல வளங்களும் நிறைந்த இந்த உலகில் வாழத் துடிப்பவனும இலக்கினை அடைய தீவிர முயற்சி செய்பவனும் வெற்றிக் கம்பத்தை விரைவில் அடைவான். இறைவனும் இத்தகையவருக்கே வழிகாட்டுவான். சோம்பேறிக்கும், முயற்சி செய்ய மறுப்பவனுக்கும் அல்ல. 'வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்' என்பதுவும் சந்தோசமும் மகிழ்ச்சியும் அவரவர் எண்ணப்படியும் செயல் மூலமாகவுமே கிடைக்கும் என்பதுவும் உண்மையானவை. நல்லது செய்தால் நல்லது விழையும். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை வவிதைத்தவன் தினை அறுப்பான். இது தரனயே விஞ்ஞானி சேர்.ஐசாக் நியூட்டனின் கூறிய மூன்றாவது விதி நிருபித்து நிற்கின்றது.

இந்நெருக்கடியான சூழ்நிலையில் நிகழ்வுகள், விழாக்கள், உற்சவங்கள், சம்பிரதாயங்கள் என்று மக்களை வருத்துவதை விடுத்து சமூகத்தினதும்,



சமூகத்தின் நல்வாழ்வு கருதியும் நல்ல கருமங்களைச் சிக்கனமாகச் செய்ய முயற்சிப்பதே சாலப் பொருத்தமானதாகும்.

அண்மையில் (2023 மே மாதம்) மாத்தறையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காதலர்கள் திருமணத்துக்கான ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து அச்செலவுகள் (இருபது இலட்சம்) அனைத்தையும் கொண்டு கணவனை இழந்து மூன்று பிள்ளைகளுடன் மிக வறுமையில் குடிசை ஒன்றில் வாழ்ந்த குடும்பத்திற்கு வீடு கட்டிக் கொடுத்து மிகச் சிக்கனமாகத் திருமணத்தை நடாத்தி முடித்தனர். வீடு கிடைத்த அந்தப் பெண்மனி இறைவன் நேரில் வந்து இந்த உதவியைச் செய்ததாக அந்தத் தம்பதியினரை வணங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்வினைச் சமூக வலைத்தளங்களில் பார்வையிட்ட சகலரும் வாழ்த்தினர். இந்த வாழ்த்தும், ஆசீர்வாதமும் புதிதாக குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த புதுமணத் தம்பதியினருக்கு இறைவனின் ஆசீர்வாதமாக அமைந்திருக்கும். இன்னுமொரு நபர் தமது திருமணத்தைச் சிக்கனமாக நடாத்தி அதில் சேமித்த பணத்தைக் கொண்டு ஆடம்பரமில்லாமல் மிக வறுமைக் கோடடின் கீழ் வாழும் 1000 மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்களின் தேவை அறிந்து 10இலட்சம் ரூபாவுக்குக் கற்றல் உபகரணங்கள், சூ, சொக்ஸ் மற்றும் கருவிகள், துவிச்சக்கர வண்டி இல்லாதவர்களுக்கு துவிச்சக்கர வண்டி, படிக்க மேசை, கதிரை இல்லாதவர்களுக்கு மேசை, கதிரை ஆகியனவும் வாங்கிக் கொடுத்தாராம். அவர் ஆடம்பரமில்லாமல் செய்ததை அந்த மக்கள் இன்றும் போற்றிப் பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதைத்தான் 'மக்கள் சேவை மசேசன் சேவை' எனக் கூறுகின்றனர். இன்னும் சிலர் சிறிதாகச் செய்து பெரிதாக விளம்பரப்படுத்திச் செல்கின்றனர்.

வீடுகளில் நடைபெறும் நிகழ்வுகளில் ஆடம்பரச் செலவுகள் தொடர்பாகச் இதே பத்திரிகையில் 'சொல்லத் துடிக்குது மனசு' என்ற தலைப்பில் 3 ஆம், 4 ஆம் கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறேன். இன்று பலர் தமது வரவு, கையிருப்பைக் கருத்தில் கொள்ளாமல் மருங்கை, பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா, 21 வது (Key Birthday) பிறந்த நாள், திருமணம், மறுவீடு செல்லல் (கால்மாறிப் போதல்), வீடு கட்டுதல், குடி புகுதல் ஆகிய நிகழ்வுகளை கடன் வாங்கி, வங்கியில் கடனெடுத்து ஆடம்பரமாகச் செலவு செய்து, பின்னாளில் கடனைச் செலுத்த முடியாமல், நாளாந்தச் செலவுக்கே கஷ்டப்படுகின்ற பலரைக் கண்டிருக்கிறோம். பணக்காரன், இலடசாதிபதி, கோடிஸ்வரர்கள் ஆடம்பரமாகச் செய்கின்றாரகள் என்பதற்காக நடுத்தர வர்க்கத்தில் உள்ளவர்களும் ஆடம்பரமாகச் செய்ய வெளிக்கிட்டு 'ஆப்பிழுத்த குரங்கு போல்' சந்தோசத்தைத் தொலைத்து நிற்கின்றனர். அதேபோல் பலர் மரண வீடுகளையும் திருமண வீடுகள் போல் ஆக்கி விட்டனர். மரணச் சடங்கு, 31, 41 ஆம் நாள் மரணச் சடங்கு, ஆண்டமுது ஆகியவற்றுக்காகப் பலர் கண்டபடி செலவு செய்கின்றனர்.

குடியிருப்பதற்கு வீடு தேவை. அது உறங்க, வழிபட, சமைக்க, கழிக்க, குழிக்க என ஓரளவு வசதியோடு இருப்பது நல்லது. பலர் கடன் வாங்கி மாளிகை போல் வீட்டைக் கட்டிப் பராமரிக்க முடியாமல் கஷ்டப்படுவதைக் கண்டு கொண்டிருக்கிறோம். சிலர் வாழ்க்கை முழுவதும் சிரமப்பட்டு வங்கிக் கடன், நகை அடகு, அதுவும் போதாமல் சொத்துககளை விற்றும் வட்டிக்குக் கடன் எடுத்தும் பெரிய வீட்டைக் கட்டிவிட்டு, இறக்கும் வரை நிம்மதியில்லாமல் வாழ்ந்ததையும் கண்டிருக்கிறோம். இவ்வாறு சிந்தித்துச் செயற்படாமல் பலர் வாழ்க்கையில் தோல்வியடைந்து கொணடிருக்கின்றனர்.

அவரைப்போல் வீடு கட்ட வேண்டும், இவரைப் போல் வாகனம் வாங்க வேண்டும். நண்பனைப் போல் ஆடம்பரமாக வாழ வேண்டும். அவர் சபை நடத்தியது போல் தானும் நடத்த வேண்டும் என்றெல்லாம் நினைத்துச் செயற்படுகின்றனரே தவிர, புத்தி சாதுரியமாக யோசித்து வாழ்க்கைளைச் சீராகக் கொண்டு நடத்தப் பலர் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் தாய் தந்தையர் பிள்ளைகளுக்குத் தமது கஷ்டம், பட்ட துன்பங்களைச் சொல்லி வழப்பார்கள். இன்று அவ்வாறல்ல நான்பட்ட துன்பத்தைப் பிள்ளைகளும் படக்கூடாது என்பதற்காகச் செல்லம் கொடுத்து ஆடம்பரமாக வளர்க்கின்றனர். பல பிள்ளைகளுக்குக் குடும்பக் கஷ்டம், துன்பம் தெரியாமல் பெற்றோரை வாட்டி வதைக்கின்றார்கள். இன்னும் சில வருடங்களில் சித்திரவதை, துன்பம், கஷ்டம் தாங்க முடியாமல் பலர் தற்கொலைக்கு முயற்சிப்பதற்கும் சந்தர்பம் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் போது 'உனது இன்றைய நிலைக்கு நீயெ காரணம்' என சுவாமி விவேகாநந்தர் கூறியதை நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது.

இருக்கும் கோயிலை இடித்துக் கட்டுதல், கும்பாபிசேகம் செய்தல், மண்டலாபிசேகம், சங்காபிசேகம், வருடாந்த ஊற்சவங்கள், விசேட பூசைகள், அபிசேகங்கள், பரிகார பூசைகள், விரதங்கள், ஏனைய பிழாக்கள், விசேட தினங்கள் என்பவற்றுக்காக ஆலயங்களில் வருடாந்தம் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்கின்றனர். ஊரில் இரு ஆலங்கள் உள்ளன. ஒன்று கல்வி வழங்கி அறிவைப் புகடி வாழ்க்கைக்கு வழிகாடடுகின்ற வித்தியாலயங்கள். இரண்டு ஆன்மீக உணர்வினையும், சமய, கலாசாரம்சார, ஒழுக்க விழுமியங்களையும் போதிக்க வேண்டிய ஆலயங்கள். இரண்டும் ஓர் ஓரின் இரு கண்கள் போன்றவை. பெரும்பாலும் பல ஆலயங்கள் இதனைச் செய்வதை விடுத்து, மக்களிடம் இருந்து நிதி அறவிடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. திருமூலர் கோயிலைப் 'படமாடும் கோயில், நடமாடும் கோயில்' என்கின்றார். அவர் கூறியதன் பொருள் பாம்பு படமாடும் போது ஓர் இடத்தில் நின்றே படமாடும். அதேபோல் கோயில் ஓர் இடத்தில் இருந்து சமூக வாழ்க்கைக்கு வேண்டிய ஆன்மீக, ஒழுக்க விழுமியங்களைப் போதிக்க வேண்டும் என்றும் அத்தகைய கோயில் சமூக நல்வாழ்வுப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனவும், அத்தகைய



கோயிலை நடமாடும் கோயில் எனவும் கூறினார். இவ்வாறு சமூகப் பணிகளில் ஈடுபடும் கோயில்கள் மிகமிகக் குறைவு என்றே கூறலாம்.

பல கோயில்களில் பல கோடி ரூபாக்கள் கைவசம் உள்ளன. அப்பணம் முழுவதும் ஆடம்பரங்களுக்கும், கோயிலை இடித்துக் கட்டுதல், தீருத்துதல், விசேட கிரியைகள், ஆராதனைகள் செய்தல், குப்பாவிசேகம், மண்டலாபிசேகம், சங்காபிசேகம், விசேட பூசைகள் உன்பவற்றுக்காகவும் பராமரிப்புப் பணிகளுக்காகவும் செலவு செய்யப்படுகின்றன. ஆலய நிருவாகிகள் சமூகநலப் பணிகளில் ஈடுபடுவதை விடுத்து நிதி சேகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். திருவிழாக் காலங்களில் வான வேடிக்கை, சோடனை, ஆலயத்துக்கான பூசைச் செலவு எனப் பல இலட்சங்கள் செலவு செய்யப்படுகின்றன. இவ்வளவு பணமும் ஒவ்வொருவரும் தன்னை வருத்தி உழைத்த பணம். இந்தப் பணத்தை அறவிடுவதற்காக எத்தனை தடவை குறித்த வீடுகளுக்குச் சென்றிருப்பர்கள். சகலரும் தெய்வ காரியம் என்றெண்ணிக் கடன் வாங்கியாவது கொடுக்கின்றனர். இவ்வர் நடந்து கொள்வதும் ஒரு பலவீனம்தான்.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் சென்றுவிட்டனர். மக்கள்மீது கருணை காட்டுவோம் என்றெண்ணி எந்தக் குருக்கள் திருவிழாவுக்கான திருவழாச் சீட்டில் பொருடகளைக் குறைத்திருக்கின்றார்கள். தமக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பொருட்களும் இன்னமாதிரி இருக்க வேண்டும் எனப் பலர் கணக்குப் பார்க்கின்றனர். இத்தனையும் கொடுத்தம் தமது பணியைப் பல குருக்கள்மார் சிறப்பாகச் செய்வதில்லை. சமஸ்கிருத சுலோக உச்சரிப்புத் தவறு, சுலோகத்தை வாய்க்குள் முணுமுணுத்தல், இரண்டு மணித்தியாலம் செய்ய வேண்டிய கிரியையை ஒரு மணித்தியாலத்தோடு முடித்தல். தப்பான படிமுறையில் கிரியைகளைச் செய்தல், தமக்கும் பங்கு கோரல். ஏனோ தானோ எனக் கிரியைகளைச் செய்தல், கோயில் நிர்வாக சபையினருக்குக் கட்டுப்படாதிருத்தல், ஒரு கொயிலில் திருவிழாச் செய்வதற்குரிய காப்புக் கட்டடிய பின்னர் இன்னுமொரு கோயிலில் சென்று கிரியை செய்தல். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் உதவிக் குருக்கள்மாரை அழைத்து வரல் எனப் பல குருக்கள் மாரின் அட்டகாசம் தாங்க முடியவில்லை.

கடந்த வருடம் கேதார கௌரி விரதத்தக்குப் பொருள் கொள்வனவில் பங்கு பிரிப்பது தொடர்பாக நகரிலுள்ள கோயில்களுக்குப் பூசைப் பொருட்களை வழங்கும் கடைக்கு முன்னால் கோயில் தர்மகர்த்தாவுக்கும், ஆலயக் குருக்களுக்கும் இடையில் பெரிய வாக்குவாதம் நடந்தது அப்பிரச்சினையை மக்கள் தீர்த்து வைத்தனர். நான் இல்லாமல் விரத பூசையை எவ்வாறு நடத்தினீர்கள் எனக் குருக்களும், நாங்கள்தான் உங்களைப் பூசை செய்வதற்கு அமர்த்தி இருக்கிறோம். நாங்கள் உன்னைப் பூசகராகப் பணிக்கு அமர்த்தாமல் இருந்திருந்தால் இவ்வளவு தட்சணையும், வீதப் பணமும் உமக்குக் கிடைத்திருக்குமா என தர்மகர்த்தாவும் கூறி நாரடித்துவிட்டனர். இவ்வாறு பல இடங்களில் பல சம்பவங்கள் நடக்கின்றன. இங்கு ஒருசில குருக்கள்மார் செய்யும் இத்தகைய செயலினால் கோயில்களுக்கும் குருக்கள்மாருக்கும் நிர்வாக சபையினருக்கும் இழுக்கு ஏற்படுகின்றன.

இன்னம் சில வேடிக்கைகளும் நடக்கின்றன. பூசைக்கும் கிரியைகளுக்கும் ஐயர்மாரிடம் கொடுக்கும் பொருட்களில் பலவற்றைத் திருடிவிட்டுச் சிலவற்றைக் கொண்டே கிரியைகளை நடாத்துகின்றனர். திருடிய பொருட்களை இன்னோர் இடத்தில் கிரியைகள் செய்வதற்காகக் கொண்டு செல்கின்றனர். பல அலயங்களில் உற்சவ காலத்தில் திருப்பணிச்சபையின் மூலம் மூலமூர்த்திகளும், தெங்வங்களும் ஒலிபெலுக்கியில் கூறி விற்கப்படுகின்றனர். விருப்பு, வெறுப்புக்கள், ஆசாபாசம் யாவும் கடந்த கடவுளர்களையும் தெய்வங்களையும் கூறிவிற்பது வேடிக்கையாக உள்ளது. சில இடங்களில் குறுக்கள்மாரே தவறுகளை செய்து பரிகார பூசைகளுக்கும் செலவு வைக்கின்றனர். சில குருக்கள்மார் நிர்வாக சபையினரைக் கைக்குள் வைத்துக் கொண்டு பல தவறுகளைச் செய்கின்றனர்.

கோயில்களில் வருடாந்த உற்சவம் ஆரம்பித்து விட்டால் முரண்பாடுகள், சண்டை சச்சரவுகள், முன்னுரிமை பெறல், சாதி, குடி, குலம், கோத்திரம், சாகியம் என்பவற்றைப் பேசிப் பல குழப்படிகளையும். அடிதடி, வெட்டுக் கொத்துக்களையும் உருவாக்கி விடுகின்றனர். அமைதியின் உறைவிடமான பல கொயில்கள் சாதி. சட்டம், சம்பிரதாயம் பேசி நீதிமன்றங்களில் நிற்கிறது. இன்று பல கோயில்கள் சமூகப் பிரச்சினைகளின் உறைவிடமாகத் திகழ்கின்றன.

ஆலயங்களை அமைதியின் உறைவிடமாகவும், ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் இடமாகவும், சமூக, சமய, கலாசாரம், சம்பிரதாயம், பழக்க வழக்கங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற மையங்களாகவும், சமூக நல்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களாகவும் மாற்றிக் கொள்வதற்கு ஆலய பரிபாலன சபையினர் முன்வர வேண்டும். ஆடம்பரங்களைக் குறைத்துச் செலவுகளைச் சிக்கனமாகச் செலவிட்டு குறிப்பிட்ட வீத நிதியை பிள்ளைகளின் கல்விப் பணிக்காக ஒதுக்க வேண்டும். கிரியைகளுக்குக் குருக்கள்மார் குறிப்பிடும் பொருட்களின் சிட்டையை 40 வீதத்தினால் குறைக்கப் பரிபாலன சபையினர் முயற்சிக்க வேண்டும். கிரியை முநறகளை முற்று முழுதாக அறிந்த குருக்கள்மாரை ஆலயங்களில் நியமிக்க முன்வர வேண்டும்.

ஆலயங்களில் நடைபெறும் தேவையற்ற அன்னதானங்களைக் குறைத்து அந்த நிதியைச் சிறுவர், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றவர்களுக்குக் கொடுக்க முன்வரவேண்டும். ஆலயங்களில் அன்னதானமாகப் புறியாணிச் சாப்பாடு கொடுப்பதனை முற்றாக நிறுத்த வேண்டும். வழிப் போக்கன், பாதயாத்திரை செய்வோர ஆகியோருக்கு அன்னதானம் கொடுப்பது சிறந்தது. வருடாந்த உற்சவத்தின் போது தொலை தூரங்களில் இருந்து அடியார்கள் வருவதனால் அவர்களுக்கும் அன்னதானம் கொடுக்கலாம். இன்று கிராமக் கோயில்களில் அன்னதானம் கொடுப்பதும், புறியாணிச் சாப்பாடு கொடுப்பதும் ஆடம்பரமாகி விட்டது. இத்தகைய நடவடிக்கைகள் இறைபக்தியைச் சீர்குலைத்து, ஆலயங்களின் ஆத்மிகப் பயணத்தை வேறு திசைக்கு இட்டுச் செல்லும். தூய்மையான பக்தி மார்க்கத்துக்குச் சவால் விடுவதாக அமைந்துவிடும் எனப் பலரும் கவலை கொள்கின்றனர். அதனாலேயே மகாகவி பாரதி அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதையும் விட அன்னயாவிலும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல் எனக் கூறினார். எனவே, இன்றைய காலகட்டத்தில் செலவுகளைச் சிக்கனமாகச் செய்து, புத்திசாதுரியமாகச் சகலரும் நடந்து கொள்வதே பொருத்தமானதாகும்.

எங்கும் எதிலும் அவதான மிருந்தால்
எங்க எது நடந்தாலும் நன்மைக்கே
என்கின்ற மனப் பக்குவமும் அதுவும்
நன்றாகவே நடந்தது என்பதும் கூடிவரும்

மனப்பக்குவம் தொடரும்..

# இந்துக்களின் அபரக்கிரியை மரபுகளுக்கு சிறப்பிடம் மாண்புறு பேரூர்: குருக்கள்மடம்

ஈழமணித்திருநாட்டில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாண்புறு பேரூர் குருக்கள்மடம் பதி அமைந்துள்ளது.புராதன தமிழரின் சமய, கலை, கலாச்சார விழுமியங்களை நவீன காலத்திலும் பறைசாற்றும் பழம் பெரும் கிராமங்கள் கிழக்கில் காணப்பட்டாலும் முன்னோடியாக செயற்படுவது குருக்கள்மடம் கிராமமே.

இந்துக்கள் பெரும்பாலும் செறிவாக வாழ்கின்ற குருக்கள்மடம் கிராமத்தில் குருக்கள்மடம் கிராமத்தின் சொத்தாகவும் மூத்த ஆலயமாகவும் இக் கிராமத்தின் புராதன ஆலயமாகவும் குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயம் விளங்குகிறது.மேலும் கிராமத்தின் மத்தியில் கிருஷ்ணன் ஆலயம் ,முருகன் ஆலயமும் கிராமத்தின் நுழைவாயிலை அண்டி ஐயப்பர் சந்நிதானமும் அமையப்பெற்றுள்ளன.

குருக்கள்மடம் கிராமத்தை பொறுத்தவரையில் கிழக்கு மாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலே பேசப்படக்கூடிய பாரம்பரிய தமிழரின் மரபு உள்ளது.அதுவே இந்துக்களின் முறையான மரணச்சடங்கு முறை. இக்கிராமத்தை பொறுத்தவரையில் பெரும்பான்மையாக இந்துக்களே காணப்படுகின்றனர்.இந்துக்களின் கிரியை முறைகள் வெவ்வேறு விதத்தில் வியாபித்து காணப்பட்டாலும் மரணச்சடங்கு முறையை பிரதிபலித்து குருக்கள்மடம் காணந்படுகிறது என்றால் அது தனிச்சிறப்பு.

இம் மரணச்சடங்கு கிரியையானது இறந்த உடல்களை தகனக்கிரியை செய்தல் என்று கொள்ளபடும்.ஒருவருடைய உயிர் பிரிந்த நிலையில் இறந்த உடலுக்காகவும் , அவருடைய ஜீவாத்மா இறைபதம் அடைய வேண்டியும் ஓர் ஆலயத்தில் இறைவனுக்கு அபிசேகம்,அக்னி வளர்க்கப்பட்டு கிரியைகள் இடம்பெறுவது போல அதே போன்று இறந்த ஆத்மாவின் பிரார்த்தனைக்காவும் , சைவ சமய கலை கலாச்சார விழுமியங்களை பறைசாற்றும் விதத்திலும் குருக்கள்மடம் கிராமத்தில் முன்மாதிரியாகவும் இச்சடங்கு முறை காணப்படுகிறது.இக்கிராமத்தை முன்மாதிரியாக கொண்டு பல கிராமங்கள் கிழக்கில் மாற்றமடைந்தது வருவதையும் அவதானிக்கலாம்.

இம் முறையில் தகப்பனுக்கு மூத்த மகனும் ,தாயக்கு இளைய மகனுமே இக்கிரியையை ஆற்றுவர் ஆச்சாரியரால் அக்னி வளர்த்து , கும்பங்கள் வைக்கப்பட்டு அபரக்கிரியைக்கான பூநூல் ஆனது அந்த சடலத்தை தோழில் சுமந்து செல்லும் பிள்ளைகளுக்கோ /உறவினர்களுக்கோ நால்வருக்கு அணிவிக்கப்பட்டு கொள்ளி குடம்,தீப்பந்தம் போன்றவள்றை சுமந்து மகன் செல்வார்.இவ்வாறான கலை கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்து இந்துக்களின் பெருமையை வெளிப்படுத்தும் கிராமமாக மாண்புறு பேரூர் காணப்படுகிறது.

இக்கிராமத்தை பொறுத்தவரையில் இக்கிராமத்திலோ / வேறு கிராமத்திலோ யாராவது இறந்தால் இறுதிக்கிரியைகளின் பங்கு கொள்ளும் ஆண்கள் அனைவரும் தமிழரினதும் இந்துக்களினதும் கலை கலாச்சார விழுமியங்களை பறைசாற்றும் வேட்டியினை அணிந்து செல்வது இக் கிராமத்தின் தனித்துவத்தினையும் ,ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணத்தையும் ஏற்படுத்துக்கின்றது.இவ் இறுதிக்கிரையில் பெரும்பாலும் 16 வயதிற்கு மேற்பட்ட இளம் சமுதாயம் உள்ளடங்கலாக அனைத்து ஆண்களும் நாகரிக உடையான வேட்டியினை அணிந்து செல்வதும் பெண்களின் கலாச்சாரமாக புடவை அணிந்து செல்வதும் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

மேலும் இக்கிராமத்தில் மற்றுமொரு பிரமிக்கத்தக்க மரபு காணப்படுகிறது. தமது வீடுகளிலே வேம்பு மரங்களை நட்டு வளர்க்கும் மரபு உள்ளது. தமது குடும்ப உறுப்பினர்கள் எவராவது இறைபதம் அடைந்தால் அக்னி சங்கமமாவதற்கு அம் மரத்தினை வெட்டி அக்னியில் சடலத்தை எரிப்பதற்கு பயன்படுத்துவர்.மேலும் சடலம் எரிக்கப்பட்டாலும் சனிக்கிழமை,புதன்கிழமை ,பஞ்சமி போன்ற நாட்களில் எரிக்கப்பட்டால் சடலத்தின் தலைமாடத்தில் தென்னம்பிள்ளை வைத்து விடுவர். அதற்கான காரணம் சனிப்பிணம் தனியாக செல்லக்கூடாது, கூடவே எந்த உயிரையும் எடுக்ககூடாது என்பதற்காக வைக்கும் மரபு உண்டு.

மேலும் எரிக்கபட்டு 3 ம் நாள் சாம்பல் எடுத்து சமுத்திரத்தில் கரைக்கும் வைபவமும் சிறப்பிடம் பெறுகிறது.சாம்பலை எடுக்கும் வரையில் மரக்கறி உணவுகளையே உண்ணும் மரபும் உண்டு .அதே போல் 31 ம் கிரியைக்கும் மரக்கறி உணவுகளையே உண்ணும் மரபும் உள்ளது.இவ்வாறு அபரக்கிரியைகளுக்கு மட்டுமல்ல இந்து சமயத்தின் முன்னோடியாகவும் , இந்துக்களை நல்வழிப்படுத்தும் நோக்கிலும் மாண்புறு பேரூர் குருக்கள்மடம் கிராமம் கலை கலாச்சார விழுமியங்களை பறைசாற்றும் பாராம்பரிய கிராமமாக காணப்படுகிறது என்பே உண்மை.

**ஆக்கம்.**
**ஸோபிதன் சதானந்தம்**
**( ஊடகவியளாளர் )**



# காணாமல்போனவர்கள் நூல் அறிமுக விழா









































இனிய நந்தவனம் பதிப்பக வெளியீடான சுவிட்சர்லாந்த் எழுத்தாளர் சண் தவராஜாவின் காணாமல் போனவர்கள் சிறுகதை நூல் அறிமுக விழா திருச்சியில் 07-06- 2023 அன்று மாலை பிரீஸ் ரெசிடென்சியில் சிறப்பாக நடைபெற்றது.

இனிய நந்தவனம் கௌரவ ஆலோசகரும், ஸ்ரீரங்கம் நகர நலச்சங்க செய்தித் தொடர்பாளருமான மேஜர் டோனர் டாக்டர் கே.சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வி.ஜி.பி நிறுவவனம் திருச்சிக் கிளைத்தணைத்தலைவர் இரா.தங்கையா, ரோட்டரி உறுப்பினர் சேர்க்கை செயலாளர் சோ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மருத்துவர் செந்தில் நல்லசாமி, ஸ்ரீசிவநாதன் சிட்ஸ் (பி) லிட்இயக்குனர் பி.டெரன்ஸ் பிலிப் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள கவிஞர் ம.திருவள்ளுவர் நூலாய்வு செய்தார்.

முன்னதாக அனைத்துலகத் தமிழ்மாமன்றத் தலைவர் வே.த.யோகநாதன் அனைவரையும் வரவேற்க இனிய நந்தவனம் பதிப்பாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நூலாசிரியர் குறித்து அறிமுகவுரையாற்றினார். இனிய நந்தவனம் மக்கள் தொடர்பாளர் பா.தனபால் நன்றி கூறினார் நிகழ்வில் எழுத்தாளர்களும், பத்திரிக்கையாளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் துரைராசா!

## யாழ்., குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பு: ஊற்று முன்னோடி!

**(யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் நினைவு தினம் 1994 ஜீன் 11 ஆகும்)**

1988 செப்டெம்பர் மாதம் ஈழத்தில் கொடூரமான போர்ச்சூழல் காரணமாக எவரும் வரத்தயங்கிய தருணம் துணிச்சலுடன் யாழ் பலகலைக்கழகத்தின் துணைவேந்தராக இன்முகத்துடன் ஒருவர் பதவியேற்றார். அவர் யாருமல்ல, மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா தான்.

அவர் பதவியேற்க நிபந்தனையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கபடும் என்ற கொடுத்திருந்த வாக்குறுதியை பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் நினைவு தினம் 1994 ஜீன் 11 ஆகும்.

### கிளிநொச்சி அறிவியல் நகரில் பொறியியற் பீடம்:

1990 களில் யாழ்ப்பாணம் பொருளாதார சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவரே மாமனிதர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கை போன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை அறிவு கூட்டி பல்கலைக் கழகம் வரைகொண்டு வந்தவர்.

வடக்குக் கிழக்கு மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே.

ஆனாலும் பேராசிரியரின் பெருங்கனவு பல வருடங்களின் பின்பே கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீட அங்குரார்ப்பண நிகழ்வுடன் பூர்த்தியாகியது எனலாம்.

பேராசிரியர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு விழிமூடும் வரை, கொடிய நோயின் பிடியில் அவர் அகப்பட்டு இருந்தாலும், யாழ் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில், பேராசான் வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லை வெளியினூடாக போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 ற்கும் மேற்பட்ட கிலோமீட்டர்கள் தூரத்தை மீதி வண்டியினூடே பயணித்திருந்தார். மக்களின் துன்ப துயரங்களை தன் தோளில் சிறந்த மண்ணின் பற்றாளர் அவர்.

### வீர வடமராட்சியின் மைந்தன்:

மாமனிதர் பேராசான் துரைராசா யாழ்ப்பாணத்தின் மூளை என்றழைக்கபடும் வடமராட்சி பிரதேசத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் வடமராட்சியில் கம்பர்மலை என்னும் ஊரிலே, இமையாணனைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அழகையா-செல்லம்மா ஆகியோருக்கு 1934 நவம்பர் 10 இல் தமிழ் மண்ணில் அவதரித்தார்.

இளமையில் ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், கற்று, 1953 ஜீலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அதன்பின் குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்டம் பெற்றார்.1958 மார்ச் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப்பணித் திணைக்களத்தில் இளைய பொறியியலாளராகப் பணியாற்றினார்.

புலமைப்பரிசில் பெற்று பேராசிரியர் கென்னத் ரொசுக்கோ வழிகாட்டலில் கேம்பிரிச்சுப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்தார்.

1958 அக்டோபர் முதல் 1961 திசம்பர் வரை துரைராசா மண்ணின் வெட்டுப் பண்புகள் பற்றிய ஆய்வில் ரொசுக்கோவிற்கு பாரியளவில் உதவினார்.

### இங்கிலாந்தில் முனைவர் பட்டம்:

இந்த ஆய்வின் மூலம் 1962 ஜீன் மாதத்தில் 'கயோலின் மற்றும் மணலின் சில வெட்டுப் பண்புகள்' என்ற தலைப்பில் பேராசான் துரைராசாவிற்கு முனைவர் பட்டம் கிடைத்தது.

முனைவர் பட்டம் பெற்ற துரைராசா இலங்கை திரும்பும் முன்னர் இலண்டனில் 1962 இல் டெரிசர்ச் என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். பின்னர் பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1971 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல் பேராசிரியராக ஆவதற்கு முன்பு கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மே 1975 முதல் செப்டம்பர் 1977 வரையும், பின்னர் பெப்ரவரி 1982 முதல் பெப்ரவரி 1985 வரையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி இருந்தார்.

### கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர்:

அக்டோபர் 1977 முதல் டிசம்பர் 1978 வரை பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஏப்ரல் 1987 முதல் ஆகஸ்ட் 1988 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தார்.

போர் தீவிரம் பெற்ற தாயக மண்ணில் 1988 செப்டம்பர் முதல் 1994 மார்ச் வரை துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். தனிப்பட்ட மருத்துவக் காரணங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற்றினார்.1994 ஜீன் 11 அன்று இரத்தப் புற்றுநோயினால் ஏற்பட்ட இதய செயலிழப்பினால் கொழும்பில் காலமானார்.

### தாயக மண்ணில் மாமனிதர் விருது:

தமிழ்த் தாயக மண்ணில் பேராசான் ஆற்றிய பணிக்காக, இவர் இறந்த பின்னர் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

மண் போற்றும் மானுடவியலாளனான துரைராசா 1977 முதல் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்திலும், 1979 முதல் இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்திலும், 1985 மே முதல் ஐக்கிய இராச்சியத்தின் குடிசார் பொறியியல் நிறுவனத்திலும் உறுப்பினராக இருந்தார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக் கழகத்தின் தலைவராகவும், அக்டோபர் 1989 முதல் அக்டோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.



பேராசானுக்கு விருதுசூட்டி மகிழும் பெருந்தலைவன்
" தேசப்பற்றோடும், மக்கள் நேயத்தோடும் மண்ணுக்கு அவர் மகத்தான சேவை ஆற்றினார். "

### பேராதனை பல்கலைக்கழக அக்பர் பாலம்:

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியர் துரைராசாவினால் அமைக்கப்பட்டது.

இப்பாலம் சிங்கள பேராசிரியர் ஒருவர் விட்ட சவாலை ஏற்று மகாவலிகங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூணை எழுப்பி பேராசிரியரின் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டது.

மேலும் பேராசிரியர் நினைவாக பேராசிரியர் துரைராசா கிண்ணம் எனும் சுற்றுபோட்டி வருடாவருடம் பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைகழகங்களுக்கிடையில் இன்றும் இடம்பெற்றுவருகிறது.

## கிளிநோச்சி பொறியியல் பீடத்தை உருவாக்கிய அறிவாளி !!

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் :

பேராசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்,இலங்கை சிவில் பொறியிலாளர்கள் அமைப்பு, தேசிய விஞ்ஞான அக்கடமி என்பவற்றின் தலைவராகவும் இருந்து அளப்பெரும் சேவைகள் ஆற்றியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் அனர்த்தங்களில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முற்றிலுமாக சிதைவடைந்திருந்த போது, வெளிநாடுகள் சென்று கல்லூரியின் நிலையினை எடுத்துரைத்து அங்குள்ள பழையமாணவர்களை ஒன்று திரட்டி நிதி சேகரித்து இன்றைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நிமிர்ந்து நிற்பதற்கு பேராசிரியரே துணை புரிந்தார்.

இன்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் நூலகம் அமைந்த கட்டிட தொகுதி பேராசிரியரின் பெயராலேயே பேராசிரியர் துரைராசா கட்டிட தொகுதி என்றே அழைக்கபடுகிறது.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்:

1990 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட விவசாயத்துறை மாங்குளத்தில் நிறுவப்படவிருந்த பொறியியல் துறைக்கும், முல்லைத்தீவில் நிறுவப்படவிருந்த மீன்பிடித் துறைக்குமான பூர்வாங்க வேலைகள் பேராசிரியர் துரைராசா அவரது முயற்சியையும் பரந்த நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசியரின் சிந்தனையில்தான். அதன் ஸ்தாபக தலைவரும் இவரேயாவார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறையை ஆரம்பிப்பதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்று அதனை நிர்வகிக்கத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அயராத முயற்சியால் பேராசிரியர் துரைராசா திரட்டிக் கொண்டார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவர்களாக படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத மாணவர்களின் நலன் கருதி வெளிவாரி நிலையத்தை பேராசிரியர் துரைராசா உருவாக்கி பயன் பெறச்செய்தார்.

### யாழ் குடா தரைக்கீழ் நீர் சேமிப்பு - ஊற்று அமைப்பு:

1980 இல் ஊற்று என்ற அமைப்பை பேராசிரியர் துரைராசா உருவாக்கி, தலைவராக செயல்பட்டு தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேற்றினார்.

அத்துடன் யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் 'நோராட்' நிறுவனத்தின் உதவியுடன் பேராசிரியர் துரைராசா மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு, இந்நிறுவனமும் 'கெயர்' நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தினையும், 'போரூட்' இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் பேராசிரியர் துரைராசா அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன.

1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் பேராசிரியர் துரைராசா அவரால் தயாரிக்கப்பட்டன.

பேராசிரியர் துரைராசாவை போன்ற கனவான்கள் இம் மண்ணில் தோன்றுவது அரிது. பேராசிரியர் துரைராசா எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர். பெருமை அதிகாரம் இல்லாத மண்ணின் மனிதர்.



மாணவர்களானாலும் சரி, பொது மக்களாலும் சரி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அவரை அணுகி தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்கு அவர் மூலம் தீர்வொன்றை காணக்கூடிய பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

### இறந்தும் இறவா மாமனிதர் பேராசிரியர் துரைராசா :

இறந்தும் இறவா மண்ணின் மகுடமாக மிளிர்ந்த மாமனிதர் என்ற அடைமொழி கற்பனையாக இருந்தாலும் அவ் அடைமொழி பேராசிரியர் அழகையா துரைராசாவின் பெயரின் முன்னால் இருக்கும்போது அது உயிரோட்டமாகவே இருக்கின்றது என அவரின் மாணவர் ஒருவர் எழுதிய வரிகள் காலங்கடந்தும் அவர் நம்முள் வாழ்கிறார் என்பதனை எடுத்துக் கூறுகிறது.

**நவீனன்**



# நூற்றாண்டு கண்ட முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம்




## கிராமத்தின் வரலாறு

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமமே முனைக்காடாகும். இக்கிராமம் தெற்கே கொக்கட்டிச்சோலைக் கிராமத்தையும் கிழக்கே முதலைக்குடா கிராமத்தையும் மேற்கே வாவியையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் காடுகள் நிறைந்திருந்த இக்கிராமத்தின் குடியேற்றமானது உலகநாச்சியின் வருகையோடு ஆரம்பிக்கின்றது. கலிங்க ஒரிசா தேசத்தை ஆட்சி புரிந்த குகசேனனுடைய மகள் உலகநாச்சி என்பவர் கௌதமபுத்தரின் தசனத்தை தனது நெடுங்கூந்தனினுள் மறைத்துக் கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரர் உலகநாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி இலங்கை வந்தார். இலங்கை வந்த அவர் அப்போதைய இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (கி.பி.301-382) புத்தசாசனத்தை கொடுத்தார். அதற்கு பதிலாக மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனிடம் மண்முனை இராச்சியத்தை பெற்று கலிங்கசேத்திலிருந்து 106 குகக் குடும்பங்களை வரவழைத்து காப்பு முனைக்காட்டை அழித்து அங்கு அம்மக்களை குடியேற்றினார். அக் காப்பு முனைக் காடே தற்கால முனைக்காடாகும்.

பாதுகாப்பு வீரர்கள் தங்கள் ஆயுதங்கள் முக்கியமான பொருட்களை இங்கு வைத்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். இதனாலும் இக்கிராமம் காப்பு முனை என அழைக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை களப்பு பகுதியாக காணப்பட்டமையினால் களப்பு முனை எனவும் பின்வந்த காலத்தில் கூறப்பட்டு வந்துள்ளது.

இங்கு வாழ்ந்த செல்வந்தர்கள் தங்களுடைய விவசாய உற்பத்திகளை பாதுகாக்கும் பொருட்டு அவற்றை பட்டறை கட்டி பாதுகாத்தனர். இப்பட்டறைகளை பாதுகாப்பதன் பொருட்டு குறைந்த சம்பளத்திற்காக வேறு இடங்களில் இருந்தும் (குறிப்பாக வெல்லாவளி போன்ற பிரதேசங்களில்) சிலரை குடியேற்றினர். இதன் மூலமும் மக்கள் குடியேற்றம் இடம்பெற்றது. இதேவேளை பட்டறை கட்டி விவசாய உற்பத்திப் பொருட்களைர் பாதுகாத்தமையால் பட்டறைத்தீவு என அழைக்கப்பட்டது. இப்பிரதேசம் மணல் நிறைந்த காடாக காணப்பட்டதால் மணற்காடு எனவும் கூறப்பட்டது.

பிற்காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்கின்ற வேளையில் மண்முனைப்பிரதேசத்திற்கு வருகை தந்தபோது காப்பு முனையில் இருந்தொ படை பாதுகாப்பு வீரர்கள் போர்த்துக்கேயர்களை துரத்தி அடித்தனர். இதனால் கோபம் கொண்ட போர்த்துக்கேயர் காப்புமுனையில் இருந்து செல்பவர்களை விசாரிப்பர். விசாரணை செய்து இடத்தை கேட்பர். இதற்கு அவர்கள் காப்புமுனை என்று பெயர் சொன்னால் அவர்களை தண்டிப்பர் துன்புறுத்துவர். இதனால் காப்புமுனை என்கின்ற பெயரை குறிப்பிடுவதற்கு பயத்தில் முனையும் காடும் சேர்ந்த பிரதேசமாக காணப்பட்டதால் இவர்கள் முனைக்காடு என்ற பெயரையே அழைத்தனர். இதனால் இன்றைக்கும் அப்பெயரே நிலைத்துள்ளது. என்பதும் வாய்மொழி மூலக்கதையாக உள்ளது.

பின்னர் தற்காலத்தில் சின்ன முனைக்காடு என அழைக்கப்படும் பிரதேசத்தில் படிப்படியாக குடியேற்றம் நிகழ்ந்தது. இவ்வாறாக குடியேற்றங்கள் இடம்பெற்று மக்களது தொகையும் அதிகரித்தது. பின்வந்த காலத்தில் மண்முனையை மையமாக வைத்து தற்கால மண்முனை தென்மேற்கு பிரதேசத்தை 11வட்டாரங்களாக பிரித்தனர். முனைக்காடு 7ம் வட்டாரம் 8ம் வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டது. தற்காலத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேசம் 24கிராமசேவை பிரிவுகளை கொண்டுள்ளது. இதில் முனைக்காடு 04 கிராம சேவகர் பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. முனைக்காடு வடக்கு முனைக்காடு கிழக்கு முனைக்காடு தெற்கு முனைக்காடு மேற்கு போன்ற கிராம சேவகர் பிரிவே அவையாகும்.

இக்கிராமத்தில் நான்கு ஆலயங்கள் அமையபெற்றுள்ளன. முனைக்காடு மேற்கு கிராமசேவகர் பிரிவில் ஸ்ரீ கொட்டாம்புலைப்பிள்ளையார் ஆலயமும் முனைக்காடு கிழக்கு கிராமசேவகர் பிரிவில் ஸ்ரீ சித்தி விநாயகர் கண்ணகை அம்மன் ஆலயமும் முனைக்காடு தெற்கு கிராமசேவகர் பிரிவில் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயமும் முனைக்காடு வடக்கு கிராமசேவகர் பிரிவில் ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயமே அவையாகும்.

சமூகத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பது கல்வியாகும். அக்கல்வியை பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு இடம் பாடசாலை. அவ்வகையில் முனைக்காடுக் கிராமத்தில் தற்காலத்தில் இரண்டு பாடசாலைகள் அமையப்பெற்றுள்ளன. அவையாவன விவேகானந்த மகா வித்தியாலயம் சாரதா வித்தியாலயம் போன்றனவாகும்.

## ஈழத்தில் கல்வி முறை

ஈழத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டமைப்புக்களின் கீழ் பாடசாலை முறைமையிலான கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்னமே கல்வி போதித்தல் நடைபெற்றிருக்கின்றது. தொழில்சார் கல்வி செவியேறற் கல்வி திண்ணைப்பள்ளி என்ற வகையில் இக்கல்வி முறையை வகையிட முடியும். இதன் தொடர்ச்சியாகவேதான் பாடசாலைக்கல்வி முறை ஆரம்பமானது.

## திண்ணைப்பள்ளி முறை

ஈழத்தில் திண்ணை பள்ளி முறையில் கல்வி போதிக்கப்பட்டமையை வரலாற்று ஆவணங்கள் நிரூபணமாக்குகின்ற அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் திண்ணைப்பள்ளி முறை இருந்தமையை எண்ணெய் சிந்து சான்றுபடுத்துகின்றது. மட்டக்களப்பில் வெருகல் தொடக்கம் பாணகம வரை பாடப்பட்டுள்ளது. இவ்வெண்ணெய்சிந்து எப்போது இயற்றப்பட்டதென்று அறியப்படவில்லை. ஆயின் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகஞ் செய்யப்பட்டதாக சிலர் கருதுகின்றனர். அவ்வாறெனில் அதன் காலம் ஏறத்தாழ 1700ஆம் ஆண்டளவிலாகலாம் என மட்டக்களப்பு பாரம்பரியக் கல்வி முறை தொடர்பான கட்டுரையில் பேராசிரியர் செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

எண்ணெய் சிந்து பாடல்களின் மூலமாக திண்ணைப் பள்ளியில் கல்விக்குத்தகுதியுடையவர் பள்ளியில் சேர்க்கும் காலம் சேர்க்கும் மாணவரை தயார்படுத்தும் முறை ஆரம்பச்சடங்குகள் கற்பிக்கும் பாடங்கள் சேகரிக்கப்படும் பொருட்கள் வழங்கப்படும் தண்டனைகள் போன்றவற்றை அறிய முடிகின்றது.

திண்ணைப்பள்ளி கூடங்கள் ஆசிரியரின் வீட்டில் தான் பெரும்பாலும் நடைபெற்றிருக்கின்றன. ஆசிரியர் தனியாக அமைந்த திண்ணையில் மான்தோலில் அல்லது பலகையில் அல்லது பாயில் அமர்ந்து இருந்து கற்பித்தலைத் தொடர்ந்து இருக்கின்றனர். மாணவர்கள் அமர்வதற்கு பாய் போடப்பட்டிருக்கும்.

ஆண்கள் மட்டுமே இக்கல்வி முறையில் கற்றனர். ஐந்து வயதில் இணையவேண்டும். பட்டை இடுதல் அரைஞாண் கட்டுதல் சட்டை அணிதல் மயிர்கோதி முடித்தல் தலைப்பாகை தரித்தல் போன்றன பாடசாலைக்கு மாணவனை தயார்படுத்தும் முறையாக காணப்பட்டது.

பள்ளியிலே எழுத்தும் கணக்கும் கற்பிக்கப்பட்டன. கணக்கு எனும் போது. வாயிற்கணக்கு பெயர்க்கணக்கு கேசக்கணக்கு நாட்கணக்கு எண்ணற்கணக்கு என பலவகை. நீதிநூல்களும் கற்பிக்கப்பட்டுள்ளன. எண்ணெய் சிந்து பாடுதல் மூலமாக ஆசிரியருக்கு அன்றாடம் தேவையான பொருட்களும் உடுப்பு வகைகளும் பணமும் சேகரிக்கப்பட்டுள்ளன. பாடங்களை ஒழுங்காக கற்காவிட்டால் நேரத்திற்கு சமூகம் கொடுக்காவிட்டால் பிரம்படி கட்டியடித்தல் கடுவெயிலில் நிற்பாட்டுதல் முசுறுகளைக்கடிக்கச் செய்தல் நெற்றியில் கல்வைத்துவிட்டு சூரிய ஒளியைப்பார்த்த வண்ணம் ஒற்றைக்காலில் நிற்கச்செய்தல் பன்றிச் சுருக்கிட்டு வெயிலில் தள்ளிவிடுதல் சவுக்கடி கோதண்டத்தில் தூக்குதல் வீட்டுக்கு அனுப்பாதுவிடல் தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன.




## முனைக்காடு கிராமத்தில் கல்வி திண்ணைப்பள்ளி முறை

திண்ணைப்பள்ளி முறை மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் அம்பிளாந்துறை கொக்கட்டிச்சோலை முதலைக்குடா முனைக்காடு மகிழடித்தீவு பண்டாரியாவெளி போன்ற பழமையான கிராமங்களில் காணப்பட்டதாக மண்முனை தென்மேற்கு கல்வி வரலாறு தொடர்பான மகேஸ்வரலிங்கம் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை அம்பிளாந்துறையில் 1883ஆம் ஆண்டு திண்ணைப்பள்ளி முறையில் இடம்பெற்ற பாடசாலைதான் இப்போதுள்ள அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் என முத்தாரம் சஞ்சிகை சுட்டிக்காட்டுகின்றது. முனைக்காடு கிராமத்திலும் திண்ணைப்பள்ளி முறையில் கல்வி போதிக்கப்பட்டு வந்துள்ளது. இத்திண்ணைப் பள்ளி முறையின் ஆரம்ப வரலாற்றை அறியமுடியாதுள்ள போதிலும் கிடைக்கின்ற தரவுகளை கொண்டு அவதானிக்கின்ற போது குமாரசாமி வாத்தியார்தான் இக்கிராமத்தின் கல்வி வலராற்றில் முன்னோடியாக இருந்திருக்கின்றார். 1872 காலப்பகுதியில் பிறந்த இவர் 1887ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசடியில் மெதடிஸ் தமிசனால் நடாத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிக்காக இணைக்கப்பட்டு பயிற்சியை நிறைவு செய்து 1890க்கு பின்னர் தனது பிறந்த கிராமமான முனைக்காடு கிராமத்திற்கு வருகைதந்து இங்குள்ள மாணவர்களுக்கு திண்ணைப்பள்ளி முறையில் கல்வியை கற்பித்திருக்கின்றார்.

## தொழில்கல்வி முறை

திண்ணைப்பள்ளி கல்வி முறைக்கு மேலதிகமாக தொழில்கல்வியும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளமையை அறியமுடிகின்றது. பரம்பரைபரம்பரையாக இக்கல்வி போதிக்கப்பட்டுள்ளது. இதில் மருத்துவம் சோதிடம் மந்திரம் போன்றவை தந்தையால் மகனுக்கும் சகோதரங்களுக்கும் போதிக்கப்பட்டுள்ளது. இக்கல்வி முறையும் முனைக்காடு கிராமத்தில் ஆரம்பகாலம் முதலே போதிக்கப்பட்டு வந்துள்ளது. இதனை இக்கிராமத்தின் கதிர்காமர் அவரின் சகோதரர் வைரமுத்து பாலிப்போடி பரிகாரியார் பரம்பரை சான்றுபடுத்துகின்றது.

## பாடசாலை முறைமை

திண்ணைப்பள்ளி முறையிலிருந்து பாடசாலை என்ற முறைக்குள் முனைக்காடு கிராமத்தில் கல்வி போதித்தல் மாற்றமுறுகின்றது. இச்செயற்பாட்டிற்கு முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு வெள்ளையப் போடி காணிகொடுத்து உதவியிருக்கின்றார். இவரால் வழங்கப்பட்ட காணியில் அக்கிராமத்தைச் சேர்ந்த முருகப்பன் உடையார் என்பவர் களிமண் சுவர் தென்னோலைக்கூரை மண்தரை ஆகியவற்றுடன் ஒரு கட்டிடத்தை கட்டி 1923ம் ஆண்டு தை மாதம் 01ம் திகதி பாடசாலையை ஆரம்பித்து நடத்தினார். இதனை கட்டுவதற்கு உதவியவரும் முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்தவருமாகிய வெ.குமாரசாமி இதன் முதல் தலைமை ஆசிரியர் ஆவார். இப்பாடசாலையில் 12மாணவர்கள் மட்டுமே அக்காலத்தில் கல்வி கற்றனர். இப்பாடசாலையை தொடர்ச்சியாக கொண்டு நடாத்துவதற்கு மிசனறிமாரே பங்களிப்பு செய்துள்ளனர்.

மெதடிஸ்தமிசன் பாடசாலையாக தோற்றம்

ஈழத்தில் தமிழர் பிரதேசங்களில் கிறிஸ்தவப் மிசனரி பல பாடசாலைகளை ஆரம்பித்தன. 1814இல் மட்டக்களப்புக்கு வருகை தந்த வில்லியம் ஒல்ற் மட்டக்களப்பில் மெதடிஸ்த பாடசாலையை உருவாக்கினார். அவற்றுள் மட்டக்களப்பு மெதடிஸ்தமிசன் கல்லூரியும் ஒன்றாகும். இதே போன்று வின்சன் மகளீர் உயர்தரப் பாடசாலை அரசடி மெதடிஸ்தமிசன் உள்ளிட்ட பல பாடசாலைகள் மெதடிஸ்தமிசனரியினால் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளி தொடக்கம் பாணகம வரையான பகுதியில் மெதடிஸ்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலும் மெதடிஸ்த பாடசாலைகளும் றோமன் கத்தோலிக்க பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. முதலைக்குடாவில் 1894இல் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து மெதடிஸ்தொ கத்தோலிக்க பாடசாலைகள் பிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ளன. அம்பிளாந்துறை அரசடித்தீவு முனைக்காடு கடுக்காமுனை கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவு ஆகிய கிராமங்களிலும் இவ்வாறான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. முனைக்காடு கிராமத்தில் 1925ஆம் ஆண்டு மிசனரிமாரின் உதவியோடு மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலை வெ.குமாரசாமி சி.ஞானமுத்து ஆகியோரின் மிசனரியின் தொடர்போடு பாடசாலைக்கல்வி முறை தொடர்ந்திருக்கின்றது. அக்காலப்பகுதியில் வெ.குமாரசாமியை தொடர்ந்து அவரது மருமகன் சி.ஞானமுத்து அதிபராக கடமையேற்றார். இவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முனைக்காட்டைச் சேர்ந்த தங்கம்மா சோமசுந்தரம் ஆகியோர் ஆசிரியர்களாக கடமை புரிந்தனர்.

## பெயர் மாற்றம்

மண்முனை தென்மேற்கு பிரதேசம் பெரும்பான்மையாக இந்து மக்கள் வாழ்ந்தொ வாழ்கின்ற பிரதேசமாகும். ஆரம்பத்தில் கிறிஸ்த மதமாற்றத்தினை இங்கிருந்த மக்கள் எதிர்த்தனர். ஆனாலும் கல்வி தொழில் ஆங்கிலம் போன்ற தேவைகளுக்காக ஒரு சிலர் குறித்த மதத்திற்கு மாறினர். அவ்வாறு மாறியவர்களின் மூலமாக மெதடிஸ்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டதும் தொடர்ந்து நடாத்துவதற்கு மிசனறிகளின் உதவியே தேவைப்பட்டது. இதே பின்னணியில் முனைக்காடு கிராமத்திலும் மெதடிஸ்தமிசன் உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம் 68வருடங்கள் முனைக்காடு மெதடிஸ்தமிசன் என்ற பெயரோடுதான் இருந்து வந்துள்ளது.

காலப்போக்கில் சமூகமாற்றத்தினால் 1993ஆம் ஆண்டு மாசி மாதம் 22ஆம் திகதி மெதடிஸ்மிசன் என்ற நாமம் நீக்கப்பட்டு முனைக்காடு விவேகானந்த வித்தியாலயம் என்ற நாமத்தினை பெற்றது.

## வகுப்பு தரம் உயர்வு

ஞானமுத்து அதிபரின் காலத்தில் இவ் வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு 8ம் வகுப்புடன் அருளம்பலம் அதிபர் இடமாற்றம் பெற்ற பின்னர் நான்காவது அதிபராக முதலைக்குடாவைச் சேர்ந்த கோபாலபிள்ளை நியமிக்கப்பட்டார். 8ம் வகுப்பு வரை இருந்த இப்பாடசாலையில் அவருடைய காலத்தில் வகுப்புக்கள் ஐந்தாக குறைக்கப்பட்டது. முனைக்காடு கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மானந்தாதேவி விஜயரெத்தினம் பாடசாலையை 01.01.1996இல் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் 06.01.1999ஆம் ஆண்டு தரம் 6 வகுப்பு தொடங்கப்பட்டது. இக்காலத்தில் பாடசாலையின் மாணவர் தொகை 480 ஆக காணப்பட்டது. 2003.01.02ஆம் திகதி தரம் 10 வகுப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக்கோரி பாடசாலை முன்பாக பெற்றோர்கள் மாணவர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 2003.01.06ஆம் திகதி வகுப்பு ஏற்றத்தருமாறு கோரிய கடிதத்தை வழங்குவதற்காகவும் வலக்கல்வி பணிப்பாளரிடம் குறிப்பிடுவதற்காகவும் அதிபரும் பெற்றோரும் வலயக்கல்விப் பணிமனைக்குச் சென்றனர். 2004.07.05ஆம் திகதி தரம் 10 11 வைப்பதற்கான அனுமதி கிடைத்தது.

2008ம் ஆண்டு மகிழடித்தீவைச் சேர்ந்த பொ.நேசதுரை அவர்கள் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார் இவரது காலத்தில் சமூகத்தின் பங்களிப்புடனும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிபார்சிலும் க.பொ.த(உ.த) வகுப்பு நடாத்துவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றது.

2017ஆம் ஆண்டு முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த மா.சத்தியநாயகம் அதிபராக பாடசாலையை பொறுப்பேற்றார். இவர் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் சிபார்சில் மகா வித்தியாலயம் என்ற உயர்வும் கிடைக்கப்பெற்றது.

2017இல் பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமாகிய கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்தார்.

## மாணவர் தொகை

1923ஆம் ஆண்டு 12மாணவர்களுடன் ஆரம்பித்த இப்பாடசாலை காலத்திற்கு காலம் மாணவர் அதிகரிப்பை கொண்டு காணப்படுகின்றமையை கடந்த கால விபரங்கள் சான்றுபடுத்துகின்றன. 1978ஆம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளி அனர்த்தத்தினால் இப்பாடசாலையும் பெரிது பாதிக்கப்பட்டது. இதனால் இதற்கு முன்னரான காலப்பகுதியின் மாணவர் தொகையை சரியாக பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் 1978ஆம் ஆண்டிற்கு பின்னர் பாடசாலையின் மாணவர் தொகையை சரியாகக் குறிப்பிடக்கூடியவாறு உள்ளது.

1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் 344மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். 1988 காலப்பகுதியில் 312மாணவர்களும் 1989 காலப்பகுதியில் 367மாணவர்களும் 1991 காலப்பகுதியில் 415மாணவர்களும் 1992 காலப்பகுதியில் 423மாணவர்களும் 1993 காலப்பகுதியில் 474மாணவர்களும் 2000ஆண்டு காலப்பகுதியில் 569மாணவர்களும் 2001ஆண்டு காலப்பகுதியில் 597மாணவர்களும் 2002ஆண்டு காலப்பகுதியில் 620மாணவர்களும் 2007ஆம் ஆண்டு 837மாணவர்களும் கல்வி பயின்றுள்ளனர்.

தற்காலத்தில் கல்வி ரீதியாகவும் இணைப்பாடவிதான ரீதியாகவும் அடைவுமட்டங்களை அதிகளவில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் வெளிப்படுத்தும் பாடசாலையாக இது உள்ளது. இப்பாடசாலை ஆரம்பமாகி 100வருடங்கள் நிறைவு தினம் கடந்த 01.01.1923ஆம் ஆண்டு நிறைவு பெற்றிருந்தது. இதனைச்சிறப்பு நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் கடந்த 091011ஆம் திகதிகளில் இடம்பெற்றன. இதன்போது வாகனஊர்தி நினைவுத்தூபி திறப்பு உறவுகளுடன் உரையாடுதல் கலை நிகழ்ச்சிகள் போன்றனவும் நடைபெற்றதுடன் நேற்று(11) இறுதிநாள் நிகழ்வு இராமகிருஸ்ண விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதன் போது விவேகம் சிறப்பு மலரும் வெளியீடு செய்யப்பட்டது.